**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை - 2019**

---

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயக்கச் செயற்பாடுகள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதுடன் சம்பந்தப்பட்ட முகாமைத்துவம் மற்றும் ஆளுகைத் தரப்பினரது பொறுப்புக்கள்**

---

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனமும் அதன் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான விதத்தில் அதற்குரித்தான வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிற்காக உரிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணுதல் வேண்டுமெனக் கோருகின்றது. மேற்படி சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவின் படி, ஏனைய கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனத்தினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அவற்றின் நிதிக்கூற்றுக்களை உரிய விதிகளில் சொல்லப்பட்டவாறு அக்காலப்பகுதிக்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் இணைத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்தச் சட்டத்தின் 38 (1) (ஈ) பிரிவின் படி, வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் சரியான நேரத்தில் தயாரித்துச் சமர்ப்பிக்கப்படுவதனை உறுதி செய்தல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் வேண்டப்படுகின்றார். எவ்வாறாயினும், 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க சுற்றறிக்கை ஆகியவற்றின் படி, 2019 ஆம் ஆண்டிற்கான இந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டின் முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய 121/1979 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கையின் 2(இ) பந்தி | கட்டளைகளுடன் இணைத்து காசோலைகளால் முற்பணங்கள் வழங்கப்பட்டவுடன், அத்தகைய முற்பணங்கள் 30 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும். இருப்பினும், 1999 முதல் 2019 வரையிலான காலப்பகுதிக்கரிய மொத்தம் ரூபா 175,470,650 தொகையான முற்பணங்கள் கூட்டுத்தாபனத்தில் தீர்க்கப்படாமல் இருந்தன. மேலும், கூட்டுத் தாபனத்தின் ஒரு செயற் | தீர்ப்பதில் காணப்படுகின்ற தாமதம் நிறுவனத்தின் கூட்டிணைப்பு மட்டத்தின் பரிசோதனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளதுடன் தற்போதைய சுற்றறிக்கையான 121/1979 இன் படி பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விரைவான அறவீட்டி | நிலுவையில் உள்ள மீதிகளை எவ்வித தாமதமும் இல்லாமல் அறவிடுதல் வேண்டுமென்பதுடன் இது தொடர்பாக கூட்டுத்தாபனம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திட்டமாக அதன் கீழ் செயற்படுகின்ற தேசிய உபகரண ங்கள் மற்றும் இயந்திர நிறுவனத்திற்குரிய (நெமோ) 2016 முதல் 2019 வரையிலான ரூபா 6,445,194 கட்டளைகளுடன் இணைந்த காசோலை முற்பண ங்கள் தீர்க்கப்படாமல் உள்ளன. | ற்கான வழிமுறைக ளுடன் கூடிய புதிய சுற்றறிக்கை செயற்படு த்தப்படுகின்றது. | |
| (ஆ) | 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய 121/1979 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | சேவைகள் அல்லது பொருட் களை வழங்கவதற்காக காசு முற்பணங்கள் வழங்கப்படுமா யின், அத்தகைய முற்பணங்கள் 14 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும். இருப்பினும், ரூபா 22,016,960 தொகையான அவ்வா றான முற்பணங்கள் 2019 திசெம்பர் இறுதி வரையிலும் தீர்க்கப்படாமல் உள்ளன. மேலும், கூட்டுத்தாபனத்தின் ஒரு செயற்திட்டமாக அதன் கீழ் செயற்படுகின்ற தேசிய உபகர ணங்கள் மற்றும் இயந்திர நிறுவனத்திற்குரிய (நெமோ) 2017 மற்றும் 2018 இற்கான ரூபா 9,711,161 காசு முற்பணங்களும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாமல் உள்ளன. | தீர்ப்பதில் காணப்படு கின்ற தாமதம் நிறுவ னத்தின் கூட்டிணைப்பு மட்டத்தின் பரிசோத னைக்காக கொண்டு வரப்பட்டுள்ளதுடன் தற்போதைய சுற்றறி க்கையான 121/1979 இன் படி பொருத்த மான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | சுற்றறிக்கையின் படி தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 2.2 செயலாற்றல்

கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோல்களாவன: (i) கட்டிடம், சிவில் இன்ஜினியரிங் மற்றும் ஏனைய பொறியியல் செயற்திட்டங்களின் புலனாய்வு, திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணம் (ii) மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் (iii) ஆதன அபிவிருத்தி பணிகளை பொறுப்பெற்றல் (iv) தயார்நிலை கலவை கான்கிரீட், வலுவூட்டப்பட்ட கான்கிரீட் மற்றும் முன் அழுத்தப்பட்ட கான்கிரீட் தயாரிப்புகளை உற்பத்திசெய்து விற்பனை செய்தல் (v) பொறியியல் செயற்திட்டங்கள் / நிறுவனங்களுக்குத் தேவையான கட்டுமானப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல் (vi) பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் (vii) மேற்கூறிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள், முறைகள் மற்றும் நுட்பங்கள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்தல்.

மேற்கண்ட குறிக்கோல்களை அடைவதற்காக 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் குறித்து பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

### 2.2.1 நிர்மாணக் கூறுகள் பிரிவு

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரீகாஸ்ட் யார்ட் - ரத்மலான (வேலைத்தள இல. 343) | | |
| | முக்கியமாக விற்பனை ரூபா 10.11 மில்லியன் அல்லது 11 சதவீதம் குறைந்துள்ளமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தேறிய இலாபம் ரூபா 6.27 மில்லியன் அல்லது 30 சதவீதம் குறைவடைந்துள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை | விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தங்கொடுவ தளம் - (வேலைத்தள இல. 1099) | | |
| | பிரதானமாக விற்பனை ரூபா 2.14 மில்லியன் அல்லது 14 சதவீதம் குறைந்துள்ளமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தேறிய நட்டம் ரூபா 2.092 மில்லியன் அல்லது 17 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை | விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வெகந்த பிரீகாஸ்ட் யார்ட் - (வேலைத்தள இல. 1738) | | |
| | முக்கியமாக விற்பனை ரூபா 16 மில்லியன் அல்லது 86 சதவீதம் குறைந்துள்ளமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தேறிய இலாபம் ரூபா 7.15 மில்லியன் அல்லது 397 சதவீதத்தால் குறைந்துள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை | விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தெமட்டகொட கொங்ரீட் வார்ப்புகள் தளம் - (வேலைத்தள இல. 1510) | | |
| | முக்கியமாக விற்பனை ரூபா 53.6 மில்லியன் அல்லது 19 சதவீதம் குறைந்துள்ளமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தேறிய இலாபம் ரூபா 4.7 மில்லியன் அல்லது 109 சதவீதத்தால் குறைந்துள்ளது. | ரயில்வே திணைக்களத்தின் கட்டளைகள் குறைவடைந்து வருகின்றமையால் விற்பனை குறைவடைந்துள்ளது. ஒவ்வொரு தரப்பினருடனான நேர்மறையான உறவின் கீழ் எதிர் காலத்தில் விற்பனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2.2 இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| (அ) | பேலியகொட செயற்பாட்டுத் தளம் ((வேலைத்தள இல. 104) | | |
| | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தேறிய நட்டம் ரூபா 5.88 மில்லியன் அல்லது 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. | எதிர்காலத்தில் பணிப் பாளர் சபையின் ஊடாக நட்டத்தை அற விடுவதற்கு மாற்றுவழி உபாயங்கள் நடைமு றைப்படுத்தப்படும். | இலாபத்தில் இயங்குவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மொரட்டுவ பல்கலைக்கழகம் ((வேலைத்தள இல. 6063) | | |
| | முக்கியமாக வருமானம் ரூபா 1,788 மில்லியன் அல்லது 13.5 சதவீதம் குறைந்துள்ளமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தேறிய இலாபம் ரூபா 2.66 மில்லியன் அல்லது 62 சதவீதத்தால் குறைந்துள்ளது. | உரிய முறையில் ஆண் டுதோரும் வருமான த்தை இனங்காண்ப தற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது மாத்தளையில் அமைந்துள்ள டொலமைட் செயற்திட்டத்தின் உற்பத்தி அளவு மோசமடைந்துள்ளது. மீளாய்வாண்டில் இதன் செயற்பாட்டு நட்டம் ரூபா 9.183 மில்லியன் ஆகும். 1992 முதல் 2017 வரையிலான காலப்பகுதியில் நில சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு கூட்டுத்தாபனம் ரூபா 7,227,099 குத்தகை வாடகையை செலுத்த வேண்டியிருந்ததுடன், அதில் ஆண்டு இறுதிக்குள் ரூபா 1.5 மில்லியன் தொகையினை மாத்திரமே கூட்டுத்தாபனம் 2018 இல் செலுத்தியது. அத்துடன், அகழ்வாராய்ச்சிக்காக புவியியல் ஆய்வக சுரங்க பணியகத்திலிருந்து பெறப்பட்ட உரிமம் 2018 முதல் புதுப்பிக்கப்படவில்லை. இதன் விளைவாக, தளத்தின் உற்பத்தி ஜூலை 2020 வரை நிறுத்தப்பட்டுள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உற்பத்தியை ஆரம்பிப்பத ற்கு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். |
| (ஈ) | **ஸ்ரீ ஜயவர்தனபுர தாதியர் பீட கட்டிட நிர்மாணம்** | | |
| | மேற்குறித்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017 அக்டோபர் 04 இல் அமைச்சரவையின் ஒப்புதலுடன் ரூபா 7,171.88 மில்லியன் (பெ.சே.வரி இல்லாமல்) ஒப்பந்த தொகையில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.<br>இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன. | | |
| (i) | சேவைநாடுனருக்கும் கூட்டுத்தாபனத்திற்கும் | இரு தரப்பினருக்கும் | உடன்படிக்கையில் கைச் |

| | | | |
|---|---|---|---|
| | இடையே ஒரு ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | இடையே அத்தகையதொரு உடன்படிக்கை மேற்கொள்ளத் தயாராகும் வரை கூட்டுத்தாபனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக் கையளித்தல் கடிதம் வழங்கப்பட்டது.<br>மேலும், உங்களுக்கு விளக்கமளித்த படி எந்தவொரு உடன்படிக்கையிலும் ஒப்பந்தத் தொகையை கண்டறிவது மிக முக்கியமாக உள்ளதுடன் உடன்படிக்கை கையெழுத்திடும் வரை எந்தவொரு வழக்கிலும் ஒப்பந்த கையளித்தல் கடிதம் மாற்று ஆவணமாக உள்ளது. | சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | விரிவான அளவுப் பட்டியல் தயாரிக்காமையால் செயற்திட்டத்தின் கிரய மதிப்பீடு கிடைக்கப்பெறவில்லை. எனவே, கிரயத்தை சரியாக மதிப்பீடு செய்யாமல் இந்த செயற்திட்டம் கூட்டுத்தாபனத்தினால் கையேற்கப்படாமையினைக் காண முடிந்தது. | மேற்குறித்த செயற்திட்டத்திற்கான விரிவான BOQ தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | விரிவான அளவுப் பட்டியலை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மதியுரைஞரால் அனுப்பவைக்கப்பட்ட 2019 செப்டம்பர் 10 ஆந் திகதிய CB/AGM/SPI/HW/C1247/1 ஆம் இலக்க கடிதத்தின்படி, நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டரை ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2019 செப்டம்பர் 10 ஆம் திகதியிலுள்ளவாறு ஒப்பந்த வேலையின் செயல்முன்னேற்றம் 05 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த செயற்திட்டம் 2020 பெப்ரவரி 22 அன்று அல்லது அதற்கு முன்னர் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். உண்மையான செயல் முன்னேற்றம் எதிர்பார்த்த முன்னேற்றத்திலும் பார்க்க மிகவும் பின்தங்கியிருப்பது தெரியவந்தது. | செயற்திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே வாடிக்கையாளர் தரப்பிலிருந்து பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.<br>அத்துடன், அகழ்வு முறையினை அடையாளம் காண்பதற்கு ஒப்பந்த காலத்தில் பெரும் பகுதி செலவானது. அதன் விளைவாக மீதமுள்ள வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் மாதந்தோறும் ரூபா 800 மில்லியன் தொகை திறைசேரியால் நிதியளிக்கப்படுதல் என்பது தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் சாத்தியமற்றதாகும். | செயல்முன்னேற்றம் இதனைக் காட்டிலும் மேம்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) மதியுரைஞரால் அனுப்பவைக்கப்பட்ட 2020 பெப்ரவரி 06 ஆந் திகதிய CB/AGM/SPI/HW/C1247/1 ஆம் இலக்க கடிதத்தின்படி, 2018 மார்ச் முதல் 2019 மார்ச் வரையான காலத்தில் கூட்டுத்தாபனத்தால் ரூபா 995 மில்லியன் முற்பணம் பெறப்பட்டிருந்தது. இருப்பினும், செய்த வேலைகளின் பெறுமதி ரூபா 537 மில்லியன் மாத்திரமேயாகும். இந்த முற்பணத்தினை கூட்டுத்தாபனத்தின் ஏனைய செயற்பாடுகளிற்காக பயன்படுத்தியிருந்தமை மேலும் அவாதனிக்கப்பட்டது. | குறித்த செயற்திட்டத்தின் சேகரிப்புகள், திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் உரிய எழுத்துமூல உடன்பாட்டுடனயே கூட்டுத்தாபனத்தின் வணிகச் செயற்பாடுகளான ஊழியம் அல்லது மூலப் பொருள் கிரயங்களை ஈடுசெய்வதற்காக செலவிடப்பட்டுள்ளதுடன் நிலமைக்கேற்ப மக்கள் நலன்கருதி செலவிடப்பட்டுள்ளது. | மதியுரை முற்பணங்களை மதியுரை செயற்பாடுகளிற்காக பயன்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

**2.3 கூட்டுத்தாபனத்தின் காசுப் பாய்ச்சல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, நிர்மாணங்கள் பிரிவு, நிர்மாணக் கூறுகள் பிரிவு, இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு, விசேட செயற்பாட்டுப் பிரிவு மற்றும் மதியுரைப் பிரிவு என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 51,243,748, ரூபா 25,628,858, ரூபா 305,927,727, ரூபா 101,110,904 மற்றும் ரூபா 222,091,810 தொகையான எதிர்மறை காசுப் பாய்ச்சலைக் காண்பித்திருந்தன. | இலங்கை வங்கியிடமிருந்து மேலதிகப் பற்று வசதி பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர்மறைான காசுப் பாய்ச்சல் நிதியிடப்பட்டது. | கூட்டுத்தாபனத்தில் உரிய தொழிற்படு மூலதன முகா மைத்துவம் மற்றும் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவ த்தினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 50 மில்லியன் மேலதிகப் பற்று வசதி மற்றும் திறைசேரியிடமிருந்து ரூபா 150 மில்லியன் நிதி வசதி ஆகியவற்றை பெற்றுக் கொண்டதன் பின்னர் மே மற்றும் நவம்பர் மாதங்களில் எதிர்மறையான காசுப் பாய்ச்சல் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 இல் நிலுவையிலுள்ள பெறவேண்டிய பட்டியல்கள் மீது தற்கா லிக மேலதிகப்பற்று வழங்கப்பட்டமையினை நேர்மறை காசுப் பாய்ச்சல் பிரதிநிதித்துவம் செய்கின்றது. | கூட்டுத்தாபனத்தில் உரிய தொழிற்படு மூலதன முகா மைத்துவம் மற்றும் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவ த்தினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 தேசிய உபகரண மற்றும் இயந்திரவியல் நிறுவனத்தின் செயற்பாடுகள் (NEMO)

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 812,820,217 பெறுமதியுடைய எழுபத்து மூன்று தேசிய இளைஞர் கூட்டுச் செயற்திட்டங்கள் செயற்பாடற்றவையக வகைப்படுத்தப்பட்டிருந்தன. | தேசிய இளைஞர் கூட்டணிக்கு சொந்தமானவையாக நாடு முழுவதிலும் சிதறிக் காணப்படுகின்ற சுமார் 104 கட்டிட நிர்மாண வேலைகள், அமைச்சரவை முடிவின்படி பெறுகைகள் நடைமுறையை மீறி வழங்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, பிணைப்பத்திரங்கள் / உத்தரவாதங்கள் இல்லாமல் முற்பணங்களை விடுவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. குறுகிய ஒப்பந்த காலம் அனுமதிக்கப்பட்டதாலும், இந்த வகையான செயல்பாடுகள் அதன் வணிக நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாக காணப்படுகின்றமையாலும் தீவின் பல்வேறு பகுதிகளிலுள்ள 25 இடங்களில் தொழில்நுட்ப பதவியணியினரை திரட்டுவதற்கும் நிர்வகிப்பதற்கும் நெமோ சிக்கலான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது. செயற்திட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதி உப ஒப்பந்தக்காரர்களின் மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்த பகுதிகளின் செயலாற்றல் திட்டமிட்டபடி எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு காணப்படவில்லை. செயற்திட்டத்தின் முக்கிய பகுதிகள் பூஜ்ஜிய சதவீதம் கொண்ட செயற்பாடற்றவையாக கருதப்பட்டமையால், அமைச்சரவையின் தீர்மானத்தின் படி இந்த திட்டம் மீளப் பெறப்பட்டுள்ளது. எனவே, அக்கறையுள்ள தரப்பினரால் முடிவுறுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | செயற்திட்டத்தை இயக்கிச் செல்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 22 செயற்திட்டங்களிற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 23,335,967 தொகையான வேலைதொடக்க முற்பணங்கள் பெறப் பட்டிருந்த போதிலும், அவற்றின் வேலை கள் 2019 திசெம்பர் 31 வரையிலும் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | செயற்திட்டங்களை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயற்பாடற்ற 82 செயற்திட்டங் களில் 24 செயற்திட்டங்கள் 2019 திசெம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் பூரணப் படுத்தப்பட வேண்டியிருந்தன. இருப்பினும், அந்தச் செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | | செயல் முன்னேற்றத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | செயற்பாட்டிலுள்ள ரூபா 241,378,424 பெறுமதியுடைய 06 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூரணப் படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அவற்றின் வேலைகள் 2019 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. இருப்பினும், அவற்றில் 03 வேலைகளிற்குரிய ரூபா 29,269,917 தொகையான வேலை தொடக்க முற்பணங்கள் ஏற்கனவே பெறப்பட்டிருந்தன. | | செயற்திட்டங்களை பூரணப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ரூபா 586,937,590 பெறுமதியுடைய 24 செயற்திட்டங்களின் செயற்திட்ட பூரணப் படுத்தல் காலம் ஏற்னவே முடிவடைந் திருந்த போதிலும், அந்தச் செயற்திட்டங் களின் உள்ளபடியான செயல் முன்னேற்றம் 2020 யூன் 30 இல் உள்ளவாறு 75 சதவீதத்திற்கும் குறைவாக காணப்பட்டது. | | செயல் முன்னேற்றத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | பெறுமதிசேர் வரி (VAT), தேசத்தைக் | பெறுமதிசேர் வரி (VAT), தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | செலுத்தப்பட வேண்டிய மீதிகளை திருப்தி |

| | | | |
|---|---|---|---|
| | கட்டியெழுப்பும் வரி (NBT) மற்றும் பொருளாதாரச் சேவைகள் கட்டணம் (ESC) தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகையால், அந்த வரிகளின் உண்மையான செலுத்தப்பட வேண்டிய மீதிகளை கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பிட முடியவில்லை. | (NBT) மற்றும் பொருளாதாரச் சேவைகள் கட்டணம் (ESC) தொடர்பான தகவல்கள் காலக்கிரமத்தில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | கரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | ரூபா 123.84 மில்லியன் மற்றும் ரூபா 7.8 மில்லியன் தொகையான முறையே பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) என்பவற்றை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்காக நெமோ இனால் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) என்பவற்றை 2020 இன் மூன்றாம் காலாண்டுக்குள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வரிகளை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 235.8 மில்லியன் தொகை 2002 முதல் 2011 காலப்பகுதியிலிருந்து செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நெமோ ஆரம்பிக்கப்பட்டது முதல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் பேணப்பட்டு வருகின்ற கட்டுப்பாட்டுக் கணக்கை கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் மீளமைப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக நிலுவையிலுள்ள சாத்தியமான அனைத்து மீதிகளையும் தீர்ப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |
| (ஐ) | நெமோ இன் அங்கீகரித்த பதவியணி 344 ஆக இருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான பதவியணி 591 ஆகும். மேலதிக பதவியணியான 247 இற்காக முகாமைத் துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அத் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நெமோ புதிதாக 23 பதவிகளையும் உருவாக்கியிருந்தது. அத்துடன் இந்த அங்கீகரிக்காத பதவிகளிற்காக 62 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | இது தொடர்பில் முகாமைத்துவக் குழுவிற்கு பரிந்துரைகளை வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.5 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 10,562,227, ரூபா 897,465,953, ரூபா 97,745,734, ரூபா 17,204,806 மற்றும் ரூபா 25,683,053 தொகையான முறையே வருமான வரி, பெறுமதிசேர் வரி, பொருளாதார சேவைகள் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பொருட்கள் சேவைகள் வரி ஆகியவற்றை செலுத்தாமையால் 2014 முதல் 2019 வரை ரூபா 161,703,053 | 2020 ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதார சேவைகள் கட்டண மீளமைத்தல் திட்டத்திற்கு இணையாக வரிகளை தள்ளுபடி செய்வதற்கு வரிசை அமைச்சின் உதவியுடன் நிதி அமைச்சுடன் பணம் செலுத்துவதற்கு பதிலாக ஒரு மாற்று ஏற்பாடு | வரிச் சட்டத்தின் பிரகாரம் வரிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மிகைஅறவீடு உள்நாட்டு இறைவரித் திணைளத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதே நேரத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் 6 மாத கால அவகாசம் மற்றும் 0% அபராதத்துடன் கூடிய பரிந்துரைக்காக பேச்சுவார்த்தை இடம் பெற்றது. | |

## 2.6 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 சனவரி முதல் 2015 யூலை வரை தொகைகளை கணிப்பிடுகையில் கருத்திலெடுக்கப்படாத ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் தொடர்பில் முறையே ரூபா 307.82 மில்லியன் மற்றும் ரூபா 41.97 மில்லியன் பங்களிப்புகளை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பாததால் அவற்றின் மீது முறையே ரூபா 171.22 மில்லியன் மற்றும் ரூபா 20.98 மில்லியன் மிகைக் கட்டணங்களை கூட்டுத்ததானம் செலுத்த வேண்டியிருந்தது. | அந்தந்த பொறுப்பு ஆரம்பத்தில் கூட்டுத் தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது தனிப்பட்ட கணப்பீடுகளில் சில முரண்பாடுகள் இருப்பது தெரியவந்ததுடன் இது உறுப்பினர்களின் தனிப்பட்ட ஆர்வத்தை பாதிக்கிறது. ஆகவே, பிழைகள் பூஜ்ஜியமாக மாறும் வரை / நிறுவனம் அல்லது உறுப்பினருக்கு இழப்பு ஏற்படாதவாறு கணக்காய்வுப் பரிசோதனை விரிவாக்கப்பட வேண்டும். இதற்கிடையில், பணம் அனுப்புவதற்கான நிதி அரசாங்க உதவியின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டம் ஆகிய வற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 சர்ச்சைக்குரிய விடயங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டியல்களை பூரணப்படுத்தும் போது வீதி வேலைகளின் உள்ளீடுகளை அளவிடுவதற்கான அடிப்படையினை பயன்படுத்துவதில் உள்ள வேறுபாடு காரணமாக, காலி மாவட்டத்தில் உள்ள மாகாண வீதி அபிவிருத்திச் செயற் திட்டத்துடன் தொடர்புடைய 30 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ரூபா 61,851,213 தொகை பெறப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட வேண்டிய மீதிகள் தாமதமின்றி அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் 16 உத்தியோகத் தர்கள் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை மீறி எரிபொருள் நுகர்வை மேற்கொண் டிருந்தமையால் எரிபொருளுக்காக ரூபா 1,233,480 மேலதிக செலவு செய்யப்பட்டுள்ளது. இதே அடிப்படையில் இந்த ஆண்டில் 03 அதிகாரிகளுக்கு நெமோ செய்த மொத்த எரிபொருள் செலவு ரூபா 530,971 ஆகும். | தலைவரால் வெளியிடப்பட்ட 2015 நவம்பர் 18 ஆந் திகதிய CH/SEC/2015/14 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள அடிப்படை யினை பிரயோகித்து போக்குவரத்து வசதிக்கு தகுதியுள்ள ஊழியர் களுக்கு எரிபொருள் வழங்கப்ப ட்டது. | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அத்துடன், போக்குவரத்து வசதிக்கு தகுதியற்ற போக்குவரத்துக்குப் பொறுப் பான உத்தியோகத்தரின் எரிபொருளு க்காக மீளாய்வாண்டில் ரூபா 543,085 செலவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் PED 1/2015 ஆம் இலக்க சுற்றறிக் கையுடன் இணங்கி ஒழுகுமாறு குறித்த உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.8 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சி-சிட்டி செயற்திட்டத்தின் நிலம் மற்றும் கட்டிடம் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் குறித்த நோக்கத் திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி அதிகாரிகளால் கிரீட் நிலமாக காணி கையகப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் குறிப்பிட்ட நிலம் கூட்டுத்தாபனத் திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், இந்த காணியின் உரிமையை தீர்ப்பதற் கான விடயம் இடம்பெற்று வருகின்றது. எனவே அனைத்து தொடர்புடைய ஆவணங்களும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | சொத்தினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அலுமினிய வார்ப்புகள் மற்றும் கூரைத் தகடுகளின் இருப்பு 2017 ஆம் ஆண்டிலிருந்து நெமோ இன் பிரதான களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டுள்ளன. | அவற்றை பொருளாதார ரீதியாகப் பயன்படுத்துவதற்கு செயற்திட்ட அலுவலர்கள் பொறுப்பாக உள்ளனர். பொது முகாமையா ளரால் நியமிக்கப்பட்ட ஒரு குழு, சரிபார்ப்புக்கு உட்பட்டு அலுமினிய தளத்தில் பொருளை ஒப்படைப் பதற்கு பரிந்துரை செய்துள்ளது. | சொத்தினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.9 செயற்திட்ட தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாணங்கள் பிரிவு | | |
| (i) | ரூபா 237.27 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட மூன்று செயற்திட்டங்களை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த செயற்திட்டங்கள் 2020 ஒக்தோபர் 31 வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | வேலைகளை உரிய நேரத்தில் பூரணப்படுத்துவதற்காக வேலைத் தளத்தின் செலவினங்களை மேற்கொள்வதற்கு ஆரம்ப மற்றும் இடைக்கால காசுப் பாய்ச்சல் போதியதாக இருக்கவில்லை. | உரிய காலப்பகுதி யில் செயற்திட்டங் களை பூரணப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ரூபா 884.66 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட நான்கு செயற்திட்டங்களை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தவதற்கு | வேலைகளை உரிய நேரத்தில் பூரணப்படுத்துவதற்காக வேலைத் தளத்தின் செலவினங்களை | செயல் முன்னேற்றம் இதனைக் காட்டிலும் மேம்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கிடப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டங்கள் 2020 ஒக்தோபர் 31 வரையிலும் அவற்றின் உண்மையான செயல் முன்னேற்றம் 80 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. | மேற்கொள்வதற்கு ஆரம்ப மற்றும் இடைக்கால காசுப் பாய்ச்சல் போதியதாக இருக்கவில்லை. | |
| (iii) | ரூபா 8,851.35 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட நான்கு செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் 2020 யூலை 30 இல் உள்ளவாறு இலக்கிடப்பட்ட எதிர்பார்ப்புடன் ஒப்பிடு கையில் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. | வேலைகளை உரிய நேரத்தில் பூரணப்படுத்துவதற்காக வேலைத் தளத்தின் செலவினங்களை மேற்கொள்வதற்கு ஆரம்ப மற்றும் இடைக்கால காசுப் பாய்ச்சல் போதியதாக இருக்கவில்லை. | செயல் முன்னேற்றம் இதனைக் காட்டிலும் மேம்படுத்தப்படுதல் வேண்டும். |

(ஆ) நிர்மாணக் கூறுகள் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| (i) | ரூபா 743.01 மில்லியன் பெறுமதியான 2292 ஆம் இலக்க செயற்திட்டத்தை மீளாய்வாண்டில் பூரணப்படுத்தவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2020 ஒக்தோபர் 31 வரையிலும் அதன் உண்மையான செயல் முன்னேற்றம் 77 சதவீதமாக காணப்பட்டது. | வேலைகளை உரிய நேரத்தில் பூரணப்படுத்துவதற்கு பட்டியல் களை தீர்ப்பதிலான தாமதம் பிரதான காரணமாக இருந்ததுடன் இதனால் வழங்குநர்களிற்கு நிதி யளிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இது ஒப்பந்தகாரரின் (கூட்டுத்தாபனத் தின்) கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட் டதாகும். | செயல் முன்னேற்றம் இதனைக் காட்டிலும் மேம்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் தாமதத்தை குறைப்ப தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ரூபா 575 மில்லியன் பெறுமதியான 2323 ஆம் இலக்க செயற்திட்டத்தை மீளாய்வாண்டில் பூரணப்படுத்தவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2020 ஒக்தோபர் 31 வரையிலும் அதன் உண்மையான செயல் முன்னேற்றம் 23 சதவீதமாக காணப்பட்டது. | சேவை நாடுனர் உடனான ஆரோக்கியமற்ற ஒப்பந்த நிர்வாகம் மற்றும் முன்மொழியப்பட்ட ஒப்பந்த வேலைகளை செய்வதற்கு இடத் தினை ஒதுக்கித் தருவதில் காணப்பட்ட தாமதம் போன்ற நடைமுறைத் தவறுகள் காரண மாக வேலைத் தளத்தில் களப்ப ணிகளில் தாமதம் ஏற்பட்டது. இது ஒப்பந்தகாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். | செயல் முன்னேற்றம் இதனைக் காட்டிலும் மேம்படுத்தப்படுதல் வேண்டும் |

## 2.10 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் 31 ஊழியர்கள் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் சுற்றறிக்கையிலுள்ள 8.3.9 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, மாகாண அமைச்சுக்கள், கட்டிடத் திணைக்களம், அரசாங்க தொழிற்சாலை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற் றுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். | ஒவ்வொருவரின் மாத சம்பளத்தையும் திருப்பிச் செலுத்துவதன் அடிப்படையில் வரிசை அமைச்சுச் செயலாளரின் வேண்டுகோளிற்கு மதிப்பளித்து அந்தந்த அரச நிறுவனங்களுக்கு ஊழியர்கள் விடுவிக்கப்பட்டதுடன், சம்பளம் அறவிடப்ப ட்டு அவை உன்னிப்பாக கண்காணிக் கப்படுகின்றது. | உரிய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து சம்பளத்தை அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அத்துடன், அச்சுற்றறிக்கையின் படி குறித்த ஊழியர்களின் சம்பளங்கள் அந்தந்த நிறுவனங்களிடமிருந்து மீளப் பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், கூட்டுத்தாபனத்தால் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் 04 ஊழியர்கள், கட்டிடத் திணைக்களத்தின் 06 ஊழியர்கள் மற்றும் அரசாங்க தொழிற்சாலையின் 02 ஊழியர்கள் சார்பாக செலுத்தப்பட்ட முறையே ரூபா 13,152,091, ரூபா 961,574 மற்றும் 297,570 தொகைகள் 2020 மே 31 வரையிலும்
மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.11 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 முதல் 2019 வரை அதிக சம்பள அளவுத் திட்டங்களில் ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட நிர்வாக மட்டத்திலுள்ள 05 பதவிகளுக்கு 28 உத்தியோகத்தர்களை கூட்டுத்தாபனம் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. மேலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 15 அளவுத்திட்ட கணக்கெடுப்பாளர்கள், 08 படவரையுனர்கள் மற்றும் 26 அத்தியட்சகர்கள் (சிவில்) ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட் டிருந்தனர். | ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய தேவை இருந்தமையால், அதற் காக ஆட்சேர்ப்புச் திட்டத்திலுள்ள நடைமுறை பிரயோகிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரர்களுக்கு நிரந்தர அடிப்படை யில் தற்போதைய சம்பள அளவுத் திட்டத்தில் தொழிலில் இணைவத ற்கு விருப்பம் இன்மையால் இதுபோன்ற உயர் நிர்வாக பதவிகளின் சேவைகளின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு, ஒப்பந்த அடிப்படையில் நியமனங் கள் வழங்கப்பட்டன. நிர்மாணச் செயற்திட்ட ஊழியர்களுக்கான கூட்டுத்தாபனத்தின் நிலையான கிரயத்தை குறைப்பதற்கு செயற் திட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. | சிரேஷ்ட நிர்வாக மட்டத்திலுள்ள பத விகளுக்கு ஆட்சேர்ப் புத் திட்டத்தின் படி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் படி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள பதவிகளின் அளவுக்கு மாத்திரமே ஆட்சேர்த்தல் வேண்டும். இருப்பினும், அதற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 33 பதவிகளிற்காக 525 மேலதிக ஊழியர்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆட்சேர்க்கப்பட்டிருந் தனர். | 03 பதவிகளுக்கு விதிகள் அங்கீகரிக்கப்படவில்லை. பிரதி பொது முகாமையாளர் பதவி மறுசீரமைக்கப்பட்டதுடன் அது ஒரு பதவிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. கூட்டுத்தாப னத்தில் அனுபவமிக்க ஆட்கள் இல்லாமையால் ஒப்பந்த அடிப்ப | தாபனவிதிக் கோவை யுடன் இணங்குவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 28 (ii) ஆம் இலக்க 2006 ஆகஸ்ட் 01 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ | | அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடி க்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் டி.எம்.எஸ்/இ3/43/4/265/1 ஆம் இலக்க 2009 நவம்பர் 25 ஆந் திகதிய கடிதம் என்பவற்றின் படி, கூட்டுத்தாபனம் முகாமைத்துவ சேவை கள் திணைக்களத்தின் ஒப்புதல் இல்லாமல் வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது புதிய பதவிகளை உருவாக்கவோ கூடாது. இருப்பினும், அந்த விதியைப் புறக்கணித்து, அங்கீகரிக்கப்படாத 08 பதவிகளுக்கு 06 ஊழியர்களுக்கு கூட்டுத்தாபனம் ஒப்புதல் அளித்துள்ளது. | டையில் மற்றொரு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. | வேண் டும். |

## 2.12 வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.3 இன் படி 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2020 ஜுலை 20 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. | 2003.06.02 ஆந் திகதிய PED / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி, வருடாந்த நிதிக் கூற்றுக்களை உரிய திகதியில் பூரணப்படுத்த வேண்டிய நடைமுறைத் தேவைப்பாடு புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து நிதி அறிக்கையிடல் நடவடிக்கைகளையும் உரிய திகதியில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் அறிக்கையிடல் மற்றும் வருடாந்த அறிக்கை ஆகியவை அதற்கமைய செயற்படுத்தப்படும். | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |